# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
## அசல் வழக்கு எண். 28/2018

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | சின்னபையன் | மதம் | .. | இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. | சின்னப்பக்கவுண்டர் | தொழில் | .. | விவசாயம் |
| வயது | .. | 75 | ஜாதி | .. | |
| கிராமம் | .. | கோனேரிப்பட்டி அக்ரஹாரம் | நாள் | .. | 29.03.2022 |
| வட்டம் | .. | சங்ககிரி | | | |

1872 ஆம் வருடத்திய சட்டம் 1 ல் குறிப்பிட்ட விதிமுறையின்படி வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சியான திரு. சின்னபையன் என்பவர், இந்நீதிமன்றத்தில் உதவியாளர் கிரேடு 3 ஆக பணிபுரியும் திருமதி. கோகிலா என்பவரால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

வா.சா.1 – சின்னபையன் - 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

எங்கு குடியிருந்து வருகிறீர்கள் என்றால், செங்கானூர் காட்டுவலவில் குடியிருந்து வருகிறேன். என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால், 12 அடி கவர்மெண்ட் வண்டித்தடத்தை கல்கொட்டி தடுத்துள்ளார்கள், அதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால், கோனேரிப்பட்டி அக்ரஹாரம் கிராமத்தில் உள்ளது. வழக்கு சொத்து சர்வே நெம்பர், விஸ்தீரணம் தெரியுமா என்றால், சர்வே நெம்பர் தெரியாது, 18 செண்ட் நிலம் உள்ளது. 18 செண்ட்டும் விவசாய நிலம் என்றால், சரிதான். பாதை உள்ளது என்பதற்கு ஆதாரமாக ஏதேனும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், வா.சா.ஆ.1 ஆவணத்தில் வண்டிபாதை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. உங்களுக்கு எழுத படிக்க தெரியுமா என்றால், தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 பத்திரம் நான் கிரையம் பெற்ற சொத்து குறித்தான பத்திரம் என்றால், சரிதான். வா.சா.ஆ.1 கிரயப்பத்திரத்தில் சக்குபந்தி விபரத்தில் வாய்க்காலுக்கு வடக்கே என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.1 பத்திரத்தில் நடதட பாத்தியம் என்று மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் வண்டிப்பாதை என்ற வாசகம் எங்கும் குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.1 பத்திரத்தில் வண்டிப்பாதை எங்கும் குறிப்பிடப்படாத நிலையில் வழக்கு சொத்து விபரத்தில் வண்டிப்பாதை உள்ளதாக மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்று சொன்னால், சரிதான். வழக்குரையில் கூறியுள்ள 12 அடி வாய்க்கால் என்பது பிரதான வாய்க்காலில் இருந்து பிரிந்து செல்லும் ஒரு சிறிய வாய்க்கால் என்று

சொன்னால் சரிதான். அந்த வாய்க்கால் செல்லும் பாதையில் இரண்டுபுறமும் விவசாய நிலங்கள்தான் உள்ளது என்று சொன்னால், சரிதான். வாய்க்கால் கரை இரண்டுபுறமும் 3 அடி அகலத்தில் சிமெண்ட்டால் பூசப்பட்டுள்ளது என்று சொன்னால், சரியல்ல, இரண்டு அடி அகலத்தில்தான் பூசப்பட்டுள்ளது. அந்த வாய்க்காலில் இரண்டுபுற வரப்புகளிலும்தான் அங்கு விவசாயம் செய்யும் நபர்கள் சென்று வருகிறார்கள் என்று சொன்னால், சரியல்ல. வாய்க்கால் 5 அடி அகலத்தில்தான் உள்ளது என்றாலும், நான் வழக்கிற்காக 12 அடி உள்ளதாக பொய் சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல. வாய்க்காலின் இருபுறமும் வண்டிப்பாதை உள்ளதாக கூறியுள்ளது பொய் என்றாலும், 2 அடி வரப்பு மட்டுமே உள்ளது என்றாலும், சரியல்ல. வாதியும், 1 முதல் 4 பிரதிவாதிகளும் மற்ற விவசாயிகளும் காலி நிலமாக உள்ளபோது ஒருவர் நிலத்தில் ஒருவர் வாகனங்களை ஓட்டிச்சென்றும், மற்ற நேரங்களில் இந்த நடைபாதையை பயன்படுத்திவருகிறோம் என்றாலும், சரியல்ல. 1 முதல் 4 பிரதிவாதிகள் பிரச்சனை செய்தார்கள் என்று வழக்குரையில் கூறியுள்ளேன் என்றால், சரிதான். அந்த பிரச்சனை எப்போது செய்தார்கள் என்றால், 4 வருடத்திற்கு முன்பாக செய்தார்கள். தேதி, வருடம் ஞாபகம் உள்ளதா என்றால், இல்லை. எத்தனை முறை தகராறு செய்தார்கள் என்றால், 5 முறை தகராறு செய்திருப்பார்கள். காவல்நிலையத்தில் புகார்ஏதேனும் கொடுத்தீர்களா என்றால், வாய்மொழியாக சொன்னோம். காவல்நிலையத்தில் வாய்மொழியாக புகார் கொடுத்த விபரத்தை உங்களுடைய முதல்விசாரணையிலோ அல்லது வழக்குரையிலோ கூறியுள்ளீர்களா என்றால், சொல்லியுள்ளேன். 1 முதல் 4 பிரதிவாதிகள் நடைபாதையை ஒருபோதும் தடுக்கவில்லை என்றாலும், என்னிடம் பிரச்சனை செய்யவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. 1 முதல் 4 பிரதிவாதிகள் வண்டிப்பாதையில் கற்களை கொட்டி தடுத்தார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. நான் வழக்கில் கூறியுள்ளதுபோல் வண்டிப்பாதை எதுவும் இல்லை என்றாலும், வாய்க்கால் மட்டுமே உள்ளது என்றாலும், சரியல்ல. 1 முதல் 4 பிரதிவாதிகள் மீதுள்ள விரோதத்தினாலும், துர்லாபம் அடைய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும், இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால், சரியல்ல.

5 ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 இன் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம் / சின்னபையன்

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி